மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது அந்த இடத்தில் யார் யார் தொழில் தொடங்க மைக்கா மூலப்பொருள் வேண்டுமென்று கேட்கிறார்களோ, அவர்களுக்கு மைக்கா வெட்டி எடுக்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

பெயின்டு உற்பத்திப் பொருள்கள்.

* 132 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கைப் பகுதியில் பெயின்டுகள் செய்வதற்கான தாதுப் பொருட்கள் கிடைப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம். சிவகெங்கைக்கு அருகில் மஞ்சள் மாக்கல் பாறையும் சிவப்பு இரும்புக்கல்லும், மாக்கல் பாறையுடன் கலந்து 2.56 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் கிடைக்கின்றது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த பெயின்ட் தொழிலுக்கான மூலப்பொருளைப் பயன்படுத்தி, அரசுத் துறையில் உடனடியாக ஒரு தொழிற்சாலையை அங்கு ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்கு தொழில் தொடங்கக் கூடிய அளவுக்கு இல்லை—அன் எக்கனமிக் ஸ்கீமாக இருக்கிறது. தொழில் தொடங்க முடியுமா என்று அறிய மீண்டும் பரிசீலனைச் செய்யப்படுகிறது.

ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில் சிற்றுண்டி விடுதி.

* 133 வினு.—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரியில் தொழிலாளர் வசதிக்காக கான்டீன் (சிற்றுண்டி விடுதி) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆலங்குளம் சிமெண்ட் தொழிற் சாலையில் தொழிலாளர் வசதிக்காக சிற்றுண்டிச்சாலே அமைக்கும் செயற்குறிப்பு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பரிசீலனை யில் உள்ளது.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தொழிலாளர்களுடைய வசதியை முன்னிட்டு, அதை விரைவிலே தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆண்டிலே 1½ லட்சம் ரூபாய் செலவில் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நிறைவேற்று வதற்காக பரிசீலனை செய்யப்படுகிறது. விரைவிலே அதுபற்றி முடி வெடுக்கப்படும்.

Prevention of wastage of ground water.

* 134. *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether this Government have received any communication from the Centre on the introduction of legislation by the State to prevent the wastage of ground water ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

THIRU N. K. PALANISWAMY : May I know the details of the legislation, Sir ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மத்திய அரசு அது குறித்து ஒரு மாதிரி சட்ட வரைவினை அனுப்பி வைத்துள்ளது. அந்த வரைவினை விவசாயத் துறையும், பொதுப்பணித் துறையும் பரிசீலித்து, வருவாய்த் துறைக்கு சில விளக்கங்கள் பெறுவதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. வருவாய்த் துறை பரிசீலித்து அறிக்கை அனுப்பியதும், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

New tank for Periavallikulam.

*** 135 *Q.*—THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Will** the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to form a new tank at Periavallikulam village, Aruppukkottai taluk, Ramanathapuram district; and

(*b*) if so, when the work will be taken up for execution ?